Registerd as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆனி 4 | [17-06-93] | வியாழக்கிழமை | ஓசை 119

## வவுனியா காவல் பணிமனை புளியங்குளத்தில் திறப்பு

தமிழீழ காவல்துறையின் வவுனியாப் பிரதேசத்திற்கான காவல் பணிமனை புளியங்குளத்தில் நேற்று திறந்துவைக்கப்பட்டது. தமிழீழ காவல்துறையின் வவுனியா பிரதேசத்திற்கான காவல் பணிமனை நேற்றுக் காலை 7-20 மணியளவில் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. இவ்வைபவ நிகழ்வில் வன்னி மாவட்டத் தளபதி திரு. கபிலன் அவர்கள் தமிழீழ தேசியக்கொடியையும், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அவர்கள் காவல்துறைக் கொடியையும் ஏற்றிவைத்தார்கள். இவ்வைபவ நிகழ்வில் வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு. மனோ அவர்களினாலும், வவுனியா கோட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சிவி அவர்களினாலும் மங்கள விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து வன்னி மாவட்டத் தளபதி திரு. கபிலன் அவர்களினால் 7-20 மணியளவிற்கு உத்தியோகபூர்வ (3ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அரசியலில் பெரும் நெருக்கடி; பிரதமர் நரசிம்மராவ் பதவி விலகுவாரா?

## வீரச்சாவு



லெப். அற்புதகாந்தன் [அற்புதன்]

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நாவற்குடா எனுமிடத்தில் கடந்த பத்தாம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் அற்புதகாந்தன்/அற்புதன் [கணேசமூர்த்தி கமலகாந்தன் - 2ஆம் குறுக்குத் தெரு. இலக்கம் 44, மட்டக்களப்பு] இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## ஒரு கோடி ரூபா லஞ்ச குற்றச்சாட்டு

[பம்பாய்]

பிரதமர் நரசிம்மராவிற்கு ஒரு கோடி ரூபாவை தான் லஞ்சமாக வழங்கியதாக, இந்தியாவில் மிகப்பெரும் பங்குச் சந்தை மோசடியில் சம்பந்தப்பட்டதாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் ஹர்சத் மேத்தா பகிரங்கமாக அறிவித்ததைத் தொடர்ந்து இந்திய அரசியலில் பெரும் நெருக்கடி எழுந்துள்ளது. இந் நெருக்கடியின் காரணமாக பிரதமர் பதவி விலக வேண்டிய சூழ்நிலை உருவாகலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன

பம்பாய் பங்கு சந்தையில் ஐயாயிரம்கோடி ரூபா மோசடி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஹர்சத் மேத்தா தாம் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவிற்கு தேர்தல் செலவிற்கென ஒரு கோடி ரூபாவை லஞ்சப் பணமாக வழங்கியதாக நேற்று பகிரங்கமாக குற்றஞ் சாட்டினார்.

பம்பாய் தாஜ்ஹோட்டலில் நேற்று செய்தியாளர் மாநாட்டில் பேசிய ஹர்சத் மேத்தா 1991 நவம்பர் 4ஆம் திகதி 67 லட்சம் ரூபாவும் 5ஆம் திகதி 35 லட்சம் ரூபாவும் என ஒரு கோடி ரூபாவை நரசிம்மராவின் டில்லியில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து வழங்கியதாகவும் இதற்கான ஏற்பாட்டை காங்கிரஸ் எம்.பி.மித்தல் ஏற்பாடு செய்ததாகவும் கூறினார்.

இந்த குற்றஞ்சாட்டுக்களை நரசிம்மராவ் மறுத்தால் பல ஆதாரங்களை வெளியிடுவோம் என ஹர்சத் மேத்தாவின் வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி எச்சரித்துள்ளார்.

இதேவேளை இக் குற்றச்சாட்டுகளை நேற்று மாலை காங்கிரஸ் கட்சி மறுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டது. எனினும்இந்தவிவகாரம் கட்சிக்கும் நரசிம்மராவிற்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும், பிரதமர்நரசிம்மராவ் பதவி விலக வேண்டிய சூழ்நிலை கூட ஏற்படலாம் என்றும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## ராவைப் பதவி விலக எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(டில்லி)

இந்தியப் பிரதமர், பங்குத் தரகரான ஹர்சத் மேத்தாவிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டதாக செய்திகள் வெளியானதையடுத்து அவரை பதவி விலகுமாறு எதிர்க்கட்சிகள் வற்புறுத்த ஆரம்பித்துள்ளன. எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா கட்சி இந்த அரசு ஊழல்செய்வோருக்காக ஊழல் செய்வோரால் நடத்...

...மாக தமது இல்லம் திரும்பினார். உடனடியாக கட்சியின் உயர் தலைவர்களது கூட்டம் ஒன்றையும் கூட்டினார்.

## கிழக்குப் பிராந்தியத்திற்கு புதிய ராணுவத் தளபதி

[கொழும்பு]

இம்மாத இறுதியில் கிழக்குப் பிராந்தியத்திற்கு புதிய இராணுவத் தளபதி நியமிக்கப்படவுள்ளார். தற்போது பிரிகேடியர் தரத்திலுள்ள வஜிர விஜேரட்ன மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டு புதிய கிழக்குத் தளபதியாக நியமிக்கப்படுவார். தற்போது கிழக்குப் பிராந்திய தளபதியாக இருக்கும் லக்கி அல்கம தொண்டர்படையின் தளபதியாக நியமிக்கப்படவுள்ளார்.

இதே சமயம் முன்னைய கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளராக இருந்த கேணல் சரத் முனசிங்கா பிரிகேடியராக பதவி உயர்த்தப்படவுள்ளார்.

## யுத்த கைதிகளின் உறவினர் இன்று புறப்படுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் பொலிஸ், இராணுவத்தினரை பார்வையிட வரும் உறவினர்கள் இன்று இரவு 10 00 மணிக்கு திருக்கோணமலையில் இருந்து ''நரோமா'' கப்பலில் புறப்படுகின்றனர்.

இவர்கள் நாளை காலை 9.00 மணிக்கு பருத்தித்துறையை வந்தடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் உறவினர்கள் இரண்டுதினங்கள் இங்கு தங்கியிருப்பார்கள். இவர்களின் பயணஒழுங்குகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டுள்ளது.

(3ஆம் பக்கம் பார்க்க)

## முருங்கனில் குண்டுவீச்சு சிறுவர் பாடசாலை சேதம்

(மன்னார்)

மன்னார் மாவட்டம் முருங்கன் பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது சிறிலங்கா விமானப்...

மாவட்டம் முருங்கன் பகுதியில் அமைந்துள்ள பரிகாரிகண்டல் மக்கள் குடியிருப்புகள் மீது வட்டமிட்ட இரு...

மீண்டும் காலை 11 மணியளவில் சிறிலங்கா விமானப் படையின் இரு பொம்பர்கள் இதே இடத்திற்கு விரைந்து...

## உண்ணாவிரதத்தை கைவிடுவதானால் புலிகளுடன் அரசு பேசி...

காந்தன் - 2ஆம் குறுக்குத் தெரு, இலக்கம் 44, மட்டக்களப்பு] இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

செலவிற்கென ஒரு கோடி ரூபாவை லஞ்சப் பணமாக வழங்கியதாக நேற்று பகிரங்கமாக குற்றஞ் சாட்டினார்.

பம்பாய் தாஜ் ஹோட்டலில் நேற்று செய்தியாளர் மாநாட்

யோகபூர்வ இல்லத்தில் வைத்து வழங்கியதாகவும் இதற்கான ஏற்பாட்டை காங்கிரஸ் எம்.பி.மித்தல் ஏற்பாடு செய்ததாகவும் கூறினார்.

இந்த குற்றஞ்சாட்டுக்களை

சாட்டுகளை நேற்று மாலை காங்கிரஸ் கட்சி மறுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்

என்றும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# முருங்கனில் குண்டுவீச்சு சிறுவர் பாடசாலை சேதம்

(மன்னார்)

மன்னார் மாவட்டம் முருங்கன் பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது சிறிலங்கா விமானப் படையின் புக்காரா மற்றும் இருபொம்பர்கள் பாரிய குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடாத்தின. இதனால் பாடசாலை ஒன்று சேதமடைந்தது.

நேற்று முன்தினம் காலை 9.50 மணியளவில் மன்னார் மாவட்டம் முருங்கன் பகுதியில் அமைந்துள்ள பரிகாரிகண்டல் மக்கள் குடியிருப்புகள் மீது வட்டமிட்ட இரு புக்காரா விமானங்கள் அடுத்தடுத்து ஐந்து குண்டுகளை வீசின. இக்குண்டுகள் அனைத்தும் வீழ்ந்து பாரிய சத்தத்துடன் வெடித்தபோதிலும் இவற்றால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

மீண்டும் காலை 11 மணியளவில் சிறிலங்கா விமானப் படையின் இரு பொம்பர்கள் இதே இடத்திற்கு விரைந்து வந்து நான்கு குண்டுகளை வீசின.

இக் குண்டுகள் வீழ்ந்து வெடித்ததால் இப்பகுதி சிறுவர் பராமரிப்பு பாடசாலை சேதமடைந்தது.

## ராவைப் பதவி விலக எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(டில்லி)

இந்தியப் பிரதமர், பங்குத் தரகரான ஹர்சத்மேத்தாவிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டதாக செய்திகள் வெளியானதையடுத்து அவரை பதவி விலகுமாறு எதிர்க்கட்சிகள் வற்புறுத்த ஆரம்பித்துள்ளன. எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா கட்சி இந்த அரசு ஊழல்செய்வோருக்காக ஊழல் செய்வோரால் நடத்தப்படும் ஊழல் அரசு எனக் கண்டித்து தேர்தலை நடத்துமாறு கோரியுள்ளது.

இதனிடையே நேற்று ஓமானில்இருந்து திரும்பிய நரசிம்மராவ் புதுடில்லியில் எந்தவித சம்பிரதாய நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளாது அவசர மாக தமது இல்லம் திரும்பினார். உடனடியாக கட்சியின் உயர் தலைவர்களது கூட்டம் ஒன்றையும் கூட்டினார்.

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் பொலிஸ், இராணுவத்தினரை பார்வையிட வரும் உறவினர்கள் இன்று இரவு 10.00 மணிக்கு திருக்கோணமலையில் இருந்து ''நரோமா'' கப்பலில் புறப்படுகின்றனர்.

இவர்கள் நாளை காலை 9.00 மணிக்கு பருத்தித்துறையை வந்தடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் உறவினர்கள் இரண்டுதினங்கள் இங்கு தங்கியிருப்பார்கள். இவர்களின் பயணஒழுங்குகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டுள்ளது.

(3ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதத்தை கைவிடுவதானால்

# புலிகளுடன் அரசு பேசி சாதகமான பதில் வேண்டும்!

## யுத்தக் கைதிகள் நிபந்தனை

தமது விடுதலை தொடர்பாக சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் நேரடியாக பேசி சாதகமான முடிவை எடுப்பின் தமது உண்ணாவிரதத்தை கைவிடுவோம் என யுத்தக்கைதிகள் நேற்று தெரிவித்தனர். 'புலிகளின் குரல்' வானொலிக்கு அளித்த பேட்டியிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளுடன் அரசு பேசி சாதகமான முடிவை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கமூடாக அறிவித்தால் உண்ணாவிரதத்தை கைவிட தயாராக இருப்பதாக அவர்கள் கூறினர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஏயர்மார்ஷல் வோல்டர் பெர்னான்டோ கைதிகளின் உறவினர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் கைதிகளை விடுவிக்க தாம் நடவடிக்கை எடுக்கப்போவதாக குறிப்பிட்டிருந்தார் என்ற செய்தியை போர்க்கைதிகள் ஏற்க மறுத்தனர். இப்படியான அரசின் உறுதிமொழிகள் அரசின் தொடர்பு சாதனங்கள் மூலம் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டால் அதை

(3ஆம் பக்கம் பார்க்க)

# தேச விரோதக் குற்றம்; ஒருவருக்குமரணதண்டனை

(நமது நிருபர்)

பல்வேறு தேசத் துரோகக் குற்றச் செயல்களைப் புரிந்த கணேசபுரம், மருக்காரம்பளை, வவுனியாவைச்சேர்ந்த லொறிச்சாரதியான 44 வயதுடைய கிருஷ்ணபிள்ளை இராஜரட்ணம் (லட்டு) என்பவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இவர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வவுனியா நகரிற்கு லொறிச் சாரதியாகச் சென்று வரும்போது இவருக்கு இராணுவ உளவாளிகளுடன் தொடர்பு ஏற்பட்டமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவர் புரிந்த தேசவிரோதச் செயல்கள் வருமாறு;

★ இத் தொடர்புகளின் மூலம் சில தகவல்களை எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள்ளிருந்து வழங்கி வந்துள்ளார். எமது அமைப்பைப் பற்றிய இரகசிய தகவல்களையும், எமது முகாம் அமைவிடங்களின் சரியானநிலைகளையும், எமது தாக்குதல்திட்டத்தின் முன்னேற்பாடுகளையும் வழங்கினார்.

★ எதிரியுடனான தாக்குதலின்போது எமது தரப்பில் ஏற்பட்ட இழப்பு, சேதவிபரங்கள் போன்றவற்றையும் வழங்கினார்.

★ எமது முகாம்கள் பற்றி விமானப்படையின் விமானத் தாக்குதல்களுக்கு சரியான இலக்குகளைக் குறித்துக்



கொடுத்தபின், முகாம் தாக்கப்பட்டதும் அத்தாக்குதலின் சரியான விபரத்தையும் கொடுத்துள்ளார்.

★ இராணுவத்தினர் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் முன்னேறுவதற்காக எமது நிலைகளையும், நிலைப்பாடுகளையும் இராணுவ உளவாளிகள் அவதானித்து வரும்படி கேட்டபோது அவற்றை எமது பகுதிக்குள் அவதானித்து அதுபற்றி தெளிவான தகவல்களை வழங்கி வந்துள்ளார். இதற்குப் பிரதியுபகாரமாக இராணுவ உளவாளிகளுடன் அந்நியோன்னியமாக இருந்து மது அருந்தியதுடன் ராணுவத்தால் கைது செய்யப்பட்ட தனது மருமகன் முறையான ஒருவரை தனது சலுகை மூலம் விடுவித்துள்ளார். தனது சாரதி அனுமதிப் பத்திரம் தொலைந்தபின் அதை இராணுவ உதவியுடன் புதிதாகப் பெற்றுக்கொண்டுள்ளார்.

★ வடபகுதியிலிருந்து செல்லும் லொறிகளை இராணுவம் தமது தேவைக்காக வேண்டிச் செல்லும்போது அவற்றை தனது செல்வாக்கின் மூலம் குறுகிய நாட்களில் திருப்பியெடுத்து உரிமையாளர்களி

(3ஆம் பக்கம் பார்க்க)

## மருந்தாளர் இல்லாத மருந்தகங்கள் அதிகரிப்பு

மருந்தாளர்கள் இல்லாத ஆங்கில மருந்தகங்களால் யாழ் நகரில் நோயாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். சிட்டையில் எழுதப்படும் மருந்து ஒன்றாக இருக்க மருந்தகங்களில் கொடுக்கப்படும் மருந்தோ வேறொன்றாக இருக்கின்றது இதனால் நோயாளிகள் மேலும் பாதிப்புறும் நிலை உருவாகியுள்ளதாக நேற்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் மருந்தகங்களின் குறைபாடுகளும் அதை நிவர்த்திப்பதற்கான ஒழுங்கு நடவடிக்கைகளும் பற்றி தனியார் மருந்தக வியாபாரிகளுக்கு நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

தனியார்மருந்தக வியாபாரிகளின் பிரதிநிதிகள் மத்தியில் உரை நிகழ்த்திய உணவு மற்றும் மருந்துக்கட்டுப்பாட்டு அதிகாரி த. மகாதேவன் தெரிவிக்கையில், ஆங்கிலமருந்தகங்களின் குறைபாடுகள் சம்பந்தமாக எமக்குவந்தமுறைப்பாடுகளை அடுத்தே நாங்கள் இந்தக் கூட்டத்தைக் கூட்டியுள்ளோம் என்று கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் பல ஆங்கில மருந்தகங்களில் பயிற்றப்பட்ட மருந்தாளர்கள்

(3ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை தோற்கடிப்பதில் ராணுவ தளபதி உறுதியாம்

[கொழும்பு]

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க வேண்டும் என்பதில் தான் உறுதியோடு இருப்பதாக சிறிலங்கா இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா கூறியுள்ளார்.

கொழும்பில் பத்திரிகையாளர் ஒருவரிடம் பேசிய சிசில் வைத்தியரட்ணா மேலும் கூறுகையில், தமது தலைமையின் கீழ் வடபகுதிக்கான நுழைவு கட்டுப்படுத்தப்பட்டு இருப்பதாகவும், கிழக்கு மாகாணத்தில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை தொடர்வதாகவும் குறிப்பிட்டார்.

1971ஆம் ஆண்டில் 6000 பேரை மட்டும் கொண்ட சம்பிரதாயபூர்வமான இராணுவமாக இருந்த சிறிலங்கா இரா

(3ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ்மா அதிபர்கள் அதிகரிப்பு

# பொலிஸ் உயரதிகாரிகள் அரசு மீது அதிருப்தி

புதிதாக 12 பிரதிப் பொலிஸ்மா அதிபர்களை நியமிக்க சிறிலங்கா பொலிஸ் திணைக்களம் தீர்மானித்ததையடுத்து பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்கள் அதிகாரிகள் மட்டத்தில் பெரும் அதிருப்தி நிலையை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது பொலிஸ் திணைக்களத்தில் 27 பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உள்ளனர். இன்னும் 12பேரை நியமித்தால் இந்தத்தொகை 39ஆக அதிகரிக்கும். இந்த நடவடிக்கை பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவியை இழிவுபடுத்தும் செயலாகும் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## சர்வசன வாக்கெடுப்பிற்கு தொண்டமான் ஆதரவாம்

வடக்குக் கிழக்கு இணைப்பு தொடர்பாக கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும்என்ற பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முடிவை அமைச்சர் தொண்டமான் சரியானதுதான் என வரவேற்றுள்ளார். நான் இணைப்பு தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பிற்கு எதிரானவனல்ல. ஆனால் வாக்கெடுப்பு நேர்மையானதாக இருக்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

இந்த சர்வஜன வாக்கெடுப்பில் வடக்குக் கிழக்கிலிருந்து வெளியேறிவிட்ட தமிழர்களும் வாக்களிக்க உரிமை வழங்கப்படவேண்டும் என்றும் அமைச்சர் தொண்டமான் சுட்டிக் காட்டினார்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பாவிக்க நல்ல நிலையில் உள்ள National Rx5030 National Rx1822 Mini Two in One Set, Mw Sw Fm) Sansui Integrated Amplifier. ஆண், பெண் இருபாலாருக்கும் ஏற்ற CITIZEN, SEIKO ஓட்டோமெற்றிக் கைகடிகாரங்கள் மிககுறைந்த விலையில் தரமானவையாக பெற்றுக் கொள்ளலாம். டில்கா வாச் அன்ட் ரேடியோ வேக்ஸ் 284 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி 6838)

### கார் கசற் ரேடியோக்களா? கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து, பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச் அன் ரேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி-6849)

### விற்பனைக்குண்டு

3மாதம் கறுப்பு நிற ஆண் அல்சேசன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி [விஜி] N விஜிதரன் 125, ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணையாழ்ப்பாணம்.

(5165)

### விசேட கூட்டம்

[யாழ்ப்பாணம்]

தொலைக்கல்வி-சிரேஷ்ட போதனாசிரியர்களுக்கான விசேட கூட்டமொன்று எதிர்வரும் 30 ஆம் திகதி அன்று காலை 9 மணிக்கு யாழ். கல்வித்திணைக்கள மாநாட்டு அறையில் நடைபெறும் என பயிற்சி நெறி இணைப்பாளர் அறிவிக்கின்றார்.


### பார்மஸி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய யாழ். ஆங்கில மருத்துவ வர்த்தக சங்கத்தினால் இலவசமாக நடாத்தப்படவிருக்கும் பார்மஸி வகுப்புகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை

## ஓராண்டு நினைவஞ்சலி

பேசும் கதையாய்: 01 — 11 — 1972



போற்றும் விதையாய்: 28 — 06 — 1992

### கப்டன் எல்லாளன் - ஒட்டேக்கா

(பொன்னுச்சாமி – ஹரிதரன்)

திதி: 17 06 1993

ஈர விழிகளிடை — எண்ணும்
பார நெஞ்சங்கள் — அறிவாய்!

தொட்டிலில் இட்டுத் தாலாட்டி —
தோள்மீது போட்டுச் சீராட்டி
கட்டிலில் வைத்துக் கதைகள் சொல்லி —
கண் வளர்த்த அன்னை தானும் மறப்பளோ!

வட்டிலில் அறுசுவை கொட்டி —
வண்ண மணிசுகே ஆடைகள் கட்டி
கொட்டமிட்டே கொஞ்சிக் குலாவிய —
கூடிப் பிறந்தோர் உனையே மறப்பரோ!

வச்சிரம் போர்த்த வாகென —
வாலிபம் நீ காண்கையில்.
உச்சி குளிர்ந்து, உளம் கனிந்த —
உன் தந்தை என்றும் மறப்பரோ!

மெச்சிடும் வேங்கை மறவன் ஆகி —
மேதகு மண்ணின் மா - வீரனுமாய்
அச்சுதன் ஆனந்த ஹரிதரன்; நீ —
அளித்த கொடைகள் இதயங்கள் மறக்குமோ?

இவருடன் அன்றைய தினம் வீரச்சாவு எய்திய சக மாவீரர்கள் அனைவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம் 17-06-93 (இன்று) நடைபெறவிருக்கும் முதலாம் ஆண்டுத் திவசக் கிரியைகளில் சக போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்திக்க அழைக்கின்றோம்.

உன் பிரிவால் ஏங்கித் தவிக்கும்
ஐயா, அம்மா, அக்கா, தங்கை,
அம்மாச்சி, அப்பாச்சி.

'சிவகுருவாசம்',
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.

(5140)

## 3-ம் ஆண்டு நினைவு நாள்



JAFFNA ENGLISH ACADEMY

LUXINTENEBRIS

National Certificate in English
(N. C. E. July'93 Examinations)
Weekend Classes: 3 to 4 30 p. m.
Commencement: 19 - 06 - 93

Lectures:
KANDIAH NAVARENDRAN
9, Rakka Lane, Chundikuli, Jaffna.

(சி-6842)

## குரக்கன் கொள்வனவு

குரக்கன் மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்யப்படும். தரத்துக்கு ஏற்ற பணம் வழங்கப்படும்.

தொடர்பு: கணேசா ஸ்ரோர்ஸ்,
அன் குயிலநாதன் நியூஸ் ஏஜென்சி,
நாவலடி, அல்வாய் வடக்கு.

(சி-6844)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப்பிறப்பு
1970-02-06

வீரச்சாவு
1991-06-17

### வீரவேங்கை "திரணா"

(செல்வி ஜெயராணி பாலசுப்பிரமணியம்)

பசுமை மாறாத இளமைக் கனவுகள்
துளிர் விட்டுப் பூவாகிக் காயாகி கனிய முன்பு
இனிய வாழ்வை எள்ளளவும் எண்ணாமல்
விடுதலைப் புலியாகி வேகமுடன் போராடி
வீரமரணத்தை விருப்புடனே தொட்டணைத்தாய்
ஈராண்டல்ல பல்லாண்டு சென்றாலும்
கடலலைபோல் எங்கள் கண்ணீர் பெருகுதம்மா
சிரித்த முகத்துடன் சித்தப்பா என்றழைக்க
திரணா மீண்டும் திடமாக வந்துதிப்பாள்.

இந்தக் கனவுகளை இதயத்தில் சுமந்தபடி அவள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டி நிற்போம்.

''அருணர்வளவு''
அல்வாய் மேற்கு.

குடும்பத்தினரும்,
உறவினரும்.

(சி/6822)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

வலி கிழக்கு வடபகுதி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்
அச்சுவேலி

## "பொதுமுகாமையாளர் பதவிக்கான வெற்றிடம்"

மேற்படி பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் 30-06-93க்கு முன் "தலைவர் தெ ப. பொ. உ. வி. கூ. சங்கம் அச்சுவேலி 10-ம் கட்டை ஆவரங்கால் புத்தூர்" என்ற முகவரிக்கு நேரிலோ பதிவுத்தபாலிலோ விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சம்பளத்திட்டம் 101.6 — $\frac{1305 — 2370}{604 \quad 711}$

கூட்டுறவு ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

தகைமைகள்:

1. கூட்டுறவு ஊழியர் 7-வதுசம்பளத்திட்டத்தில் 3வருட (மூன்று வருடம்) கால அனுபவம். (முகாமை / மேற்பார் மட்ட பதவியில்)
2. கூட்டுறவு ஊழியர் 8-வது சம்பளத்திட்டத்தில் 6 வருட கால (ஆறு வருடம்) அனுபவம்

அல்லது

3. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக வர்த்தக பட்டதாரி 4வருட கால முகாமையில் அனுபவத்துடன்

அல்லது

4. கூட்டுறவு பணியாளர் உயர் பயிற்சி சித்தி / க.பொ.த. உயர்தரம் சித்தி அத்துடன் 6வருட கால முகாமையில் அனுபவம்.

குறிப்பு :- சங்கப் பணியாளர்களுக்கும், சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

செ. கணபதிப்பிள்ளை
தலைவர்

(5156)

## நினைவு கூருகின்றோம் ... 1993-06-17

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார்- அடம்பன் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 03 தமிழ் விவசாயிகள்.

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி தெணியன்குளப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழர்கள்.

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட பளை - தம்பலகாமத்தைச் சேர்ந்த தமிழிளைஞன்.

ரயில் வண்டியில் பயணம் செய்து கொண்டிருக்கையில் வவுனியாவில் வைத்து தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் - கந்தர்மடத்தைச் சேர்ந்த யாழ் - பரியோான் கல்லூரி மாணவன்.

1990ஆம் ஆண்டு திருமலை - மூதூர் கட்டைபறிச்சான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

கப்டன் குட்டி (இராசலிங்கம் சிவானந்தம்- மேன்காமம் - திருமலை)

மாங்குளத்தில் சிறிலங்கா முகாம் மீதான சமரின் போது வீரச்சாவெய்திய-

மாக்கிரட் (கறுப்பையா கிருஷ்ணகுமார் - முள்ளியவளை, கணுக்கேணி மேற்கு-மணலாறு)

மட்டுநகரில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

நியாஸ் (- - - மட்டக்களப்பு)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படு

## விசேட கூட்டம்

[யாழ்ப்பாணம்]

தொலைக்கல்வி-சிரேஷ்ட போதனாசிரியர்களுக்கான விசேட கூட்டமொன்று எதிர் வரும் 30 ஆம் திகதி அன்று காலை 9 மணிக்கு யாழ். கல்வித்திணைக்கள மாநாட்டு அறையில் நடைபெறும் என பயிற்சி நெறி இணைப்பாளர் அறிவிக்கின்றார்.

## பார்மஸி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய யாழ். ஆங்கில மருத்துவ வர்த்தக சங்கத்தினால் இலவசமாக நடாத்தப்படவிருக்கும் பார்மஸி வகுப்புகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை வரும் 20ஆம் திகதி காலை 9 மணிக்கு 143, 3ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள பணிமனையில் நடைபெறவுள்ளன. இப் பயிற்சியினை பெற விரும்புவோர் உரிய ஆவணங்களுடன் மேற்குறிப்பிட்ட திகதி அன்று சமுகம் தருமாறு சங்கம் கேட்டுள்ளது மருந்தகத்தில் பணிபுரிவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். விரிவுரைகள் பல்கலைக் கழக விரிவுரையாளர்களால் நடாத்தப்படும்.

## விளையாட்டு

சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையப் பாலர்பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் 19ஆம் திகதி சனிக்கிழமை ஐயனார் ஆலயத்துக்கு அருகாமையில் நிலையத் தலைவர் வ. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதமவிருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரம் டிவகலாலா அவர்களும் கௌரவ விருந்தினர்களாக யாழ். சர்வோதய இயக்குனர் திரு. கி. சிவசுப்பிரமணியம், சர்வோதய இணைப்பாளர் திரு பா. செல்வரட்ணம், சுழிபுரம் கொத்தணி அதிபர் திரு கா. சந்திரபாலன், கடற்புலிகள் மகளிர் அமைப்பு செல்வி பொன்னி மற்றும் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (41)

★

சுழிபுரம் கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆரம்பப் பிரிவு மாணவ, மாணவியருக்கான மெய்வல்லுநர் போட்டிகள் 18ஆம் திகதி வெள்ளியும், 19ஆம் திகதி சனிக்கிழமையும் காலை 8.30 மணியளவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் கொத்தணி அதிபர் திரு கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெறும். (41)

---

நடைபெறவிருக்கும் முதலாம் ஆண்டுத் திவசக் கிரியைகளில் சக போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்திக்க அழைக்கின்றோம்.

உன் பிரிவால் ஏங்கித் தவிக்கும்

ஐயா, அம்மா, அக்கா, தங்கை,
'சிவகுருநிவாசம்', அம்மாச்சி, அப்பாச்சி.
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை. (5140)

---

## 3-ம் ஆண்டு நினைவு நாள்



### கப்டன் குட்டி

(இராசலிங்கம் சிவானந்தன்)

பள்ளிக்குடியிருப்பு
மூதூர்

| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 09-04-1967 | 17-06-1990 |

மூதூர் பள்ளிக் குடியிருப்பில் முத்தமிட்டு வளர்ந்தாய்
முள்ளெனக் குத்திய பகை முடிக்க நீ எழுந்தாய்
ஈழத் தலைநகரின் இணையற்ற மறவனும் நீ
ஈன்ற தமிழன்னைக்காய் மாண்ட மகனும் நீ
காலைக் கதிரவன் போல் களத்தில் குதித்தாயே
மாலை மறைந்தது போல் மண்ணிற் சிவந்தாயே
ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்
ஆழமாய் பதிந்த - உன்நினைவு மறக்காத

அண்ணா, அண்ணி, இ. பாலசுப்பிரமணியம்
பிள்ளைகள். 494
உனது நினைவை தொடருகிறோம். கமல் வீதி,
(5158) யாழ்ப்பாணம்.

---

(செல்வி ஜெயராணி பாலசுப்பிரமணியம்)

பசுமை மாறாத இளமைக் கனவுகள்
துளிர் விட்டுப் பூவாகிக் காயாகி கனிய முன்பு
இனிய வாழ்வை எள்ளளவும் எண்ணாமல்
விடுதலைப் புலியாகி வேகமுடன் போராடி
வீரமரணத்தை விருப்புடனே தொட்டணைத்தாய்
ஈராண்டல்ல பல்லாண்டு சென்றாலும்
கடலலைபோல் எங்கள் கண்ணீர் பெருகுதம்மா
சிரித்த முகத்துடன் சித்தப்பா என்றழைக்க
திரணா மீண்டும் திடமாக வந்துதிப்பாள்.

இந்தக் கனவுகளை இதயத்தில் சுமந்தபடி அவள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டி நிற்போம்.

''அருணர்வளவு'' குடும்பத்தினரும்,
அல்வாய் மேற்கு. உறவினரும்.

(சி/6822)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### இளம்புலி கீதா

( செல்வி தர்ஷினி திருச்செல்வம் )

| ஈழத்தாயின் மடியில் | ஈழத்தாயக மண்ணில் |
|---|---|
| 17-10-1975 | 17-06-1991 |

திதி வளர்பிறை சஷ்டி 25-06-1993

''பேனா ஏந்தியகைகள் இன்று துப்பாக்கி ஏந்துகின்றன
முதலில் நாட்டு நிலைமையை யோசியுங்கள்..
தமிழீழம் கிடைக்கும்வரை போராடியே தீருவோம்''
என்ற கீத வார்த்தையை முன்வைத்த கீதாவே
உமக்கு என்றும் எங்கள் அஞ்சலிகள்.

அப்பா, அம்மா, அண்ணா, அக்கா,
பறாளாய் றோட், மற்றும் உறவினர், நண்பர்கள்.
சுளிபுரம். (5154)

---

விவசாயிகள்.

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி தெணியன்குளப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழர்கள்.

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட பளை - தம்பலகாமத்தைச் சேர்ந்த தமிழிளைஞன்.

ரயில் வண்டியில் பயணம் செய்து கொண்டிருக்கையில் வவுனியாவில் வைத்து தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் - கந்தர்மடத்தைச் சேர்ந்த யாழ் - பரியோான் கல்லூரி மாணவன்.

1990ஆம் ஆண்டு திருமலை - மூதூர் கட்டைபறிச்சான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

கப்டன் குட்டி (இராசலிங்கம் சிவானந்தம்- மேன்காமம் - திருமலை)

மாங்குளத்தில் சிறிலங்கா முகாம் மீதான சமரின் போது வீரச்சாவெய்திய-

மாக்கிரட் (கறுப்பையா கிருஷ்ணகுமார் - முள்ளியவளை, கணுககேணி மேற்கு-மணலாறு)

மட்டுநகரில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

நியாஸ் (- - - மட்டக்களப்பு)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மட்டு - பெரியநீலாவணை 01ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

தாந்தாமலையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட குழந்தை உட்பட 03 தமிழர்கள்.

மட்டு - கிரான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்கள்.

திருமலை - மூதூர்ப்பகுதியில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன், மற்றும் அலஸ் தோட்டப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள்.

மல்வத்தையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட சிற்றூரவைத தலைவர்.

1991ஆம் ஆண்டு வவுனியா - செட்டிப்புலவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய-

வேந்தினி (நேசமலர் கணபதிப்பிள்ளை - பன்குடாவெளி - மட்டு.)

லெப். சுதா (ஜெகநாதன் நாகேந்திரன் - கோவில்குளம் - வவுனியா)

2-ம் லெப். ராமன் (பழனி கிருஷ்ணமூர்த்தி - அரசன்குளம், ஓமந்தை-வவுனியா)

2-ம் லெப். குணாளன் (சுந்தரம் ரவிச்சந்திரன் - மடுக்குளம் - வவுனியா)

கபில்ராஜ் (இராமசாமி ஜோண் ஜேக்கப் ஜஸ்ரின- 4-ம் படிவம, பாவறகுளம் வவுனியா)

வவுனியா - குருக்கஞூர்ப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய-

ஜெகன் ( - காந்திராஜா - திருப்பழுகாமம் - மட்டு. )

பிறேமினி (மேரிவிற்றின் சார்மெலா அந்தோனிப் பிள்ளை - பெரியதம்பனை- வவுனியா)

திரணா (ஜெயராணி (ஜெயா) பாலசுப்பிரமணியம் - ''அருள்வளவு'' அல்வாய் மேற்கு, அல்வாய், கரவெட்டி - யாழ். )

கீதா (தர்சினி திருச்செல்வம் -அம்பனை, தெல்லிப்பழை யாழ். )

மட்டு - 38-ம் கிராமத்திற்கு வந்தபாலையடி முகாம் இராணுவத்தினரால் அப்பகுதியைச் சேர்ந்த முதியர் சுட்டுக் கொலை.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6847)

சிந்தனைக்கு

இரக்கமான இதயம் கொண்டிருந்தாலன்றி நீதிநெறியில் நாம் நிற்க இயலாது.

– லொவனார்க்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## இருட்டடிப்பு திட்டமிட்ட சதி

விடுதலைப் புலிகளின் காவலிலுள்ள யுத்தக் கைதிகளான சிங்களப் பொலிஸார் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்து நேற்றுடன் நான்கு நாள் நிறைவுற்றது. ஆனால் இதுவரை சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் தொடர்புச் சாதனங்களும், சிங்களப் பேரினவாத பத்திரிகைகளும் திட்டமிட்டு அவ்விடயத்தை இருட்டடிப்புச் செய்து வருகின்றன.

இதன் மூலம் தென்னிலங்கையில் உருவாக கூடிய ஒரு பெரும்அரசியல் நெருக்கடியை தணித்து விடலாம் அல்லது திசை திருப்பிவிடலாம் என அரசாங்கம் எண்ணுகின்றது. இதேவேளை சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகள் கைதிகள் உயிர் போனாலும் தமிழருடன் சமரசம் செய்யக் கூடாது என்ற ரீதியில் செயற்படுவது போல் உள்ளது.

இதேவேளை, உண்ணாவிரதம் இருக்கும் பொலிஸாரின் நிலையோ நாளாந்தம் மோசமாகி வருகின்றது. தமது பெற்றோர் யாழ்ப்பாணம் வந்து தம்மைப் பார்வையிடும் வரையில் தாம் உயிருடன் இருப்போமா என்று அவர்கள் அச்சப்படத் தொடங்கியுள்ளனர்.

இவ் உண்ணாவிரதம் பற்றிய அறிவிப்பானது, உண்ணாவிரதம் ஆரம்பிப்பதற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்னரே அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. அரசாங்கம் அது குறித்து அலட்டிக் கொண்டதாக இல்லை. அவர்களை விடுவிப்பதற்கு முன்னேற்றகரமான நடவடிக்கை எதையும் எடுக்கவுமில்லை. தற்பொழுது உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கூட பொலிஸாரின் நிலை குறித்து கவலைப்படுவதாக இல்லை.

அத்தோடு இவ்விடயத்தில் அரசாங்கம் குதர்க்கம் பண்ணுவதிலும், பிரச்சினையை மேலும் மேலும் சிக்கலாக்கும் விதத்திலேயே நடந்து கொள்கின்றது. சிங்களப் பொலிஸார் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பிக்கும் முன்னரே, இப் போராட்டம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிரானது என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தனர். தம்மை விடுதலை செய்வதற்கு உடனடி

# எயர் ‘பஸ்’ கொள்வனவு; ஒப்பந்தம் மீளாய்வு

(கொழும்பு)

எயர்லங்கா நிறுவனம் பிரான்ஸ் ''எயர் பஸ்'' நிறுவனத்திடமிருந்து குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்காக மேற்கொண்ட ஒப்பந்தம் குறித்து மீண்டும் பேச்சு வார்த்தை நடத்த விரும்புவதாக எயர்லங்கா நிறுவனம் அறிவித்துள்ளது.

எயர்பஸ் நிறுவனத்திடம் இருந்து ஐந்து ஏ-307 விமானங்களையும், இரண்டு ஏ-320 விமானங்களையும் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ள முன்னர் எயர்லங்கா நிறுவனம் முடிவு செய்திருந்தது. தற்போது நிதியமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கத்தின் ஆலோசனைப்படி இவ் விடயம் குறித்து மீள் பரிசீலனை செய்ய எயர்லங்கா நிறுவனம் விரும்புகிறது.

புதிய யோசனையின்படி இரண்டுஏ-340 விமானங்களும் வேறு ஒரு சிறு விமானமும் கொள்வனவு செய்யவிரும்புவதாக பாஸ்கரலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பான கூறுவிலைகள் தொடர்பாக இன்னமும் எதுவித பேச்சுக்களும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்த அவர், நிதியமைச்சின் செயலாளர் என்ற ரீதியிலேயே இவ் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

எயர் லங்காவின் கணக்குகள் தொடர்பான சர்ச்சை ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வாறான குத்தகைக்குப்பெறப்பட்ட விமானங்களின் மூலம் பலலட்சக்கணக்கான டொலர் கடன் செலுத்த வேண்டிய நிலை எயர் லங்காவிற்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## உதவி வழங்கும் நாடுகளால் ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு பகுதிக்குத் தடை

இவ்வாரம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் இலங்கைக்கு நிதியுதவி வழங்க, உதவி வழங்கும் நாடுகள் அதிக கெடுபிடிகளை விதிக்க மாட்டா என பி.பி.ஸி. தெரிவித்தது. இதேசமயம் இலங்கைக்கு உதவியாக வழங்க உததேசிக்கப்பட்டுள்ள 80 கோடி அமெரிக்க டொலரில் ஒருபகுதி வடக்கு கிழக்கு அபிவிருத்திப் பணிக்கு ஒதுக்கப் பட்டவை. உள்நாட்டுப் போர் முடியும் வரையில் இந்தத் தொகுதிப் பணம் வழங்கப்பட மாட்டாது என்றும் பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது.

# பிரேமதாசா குறித்துப் பேச இன்று யாரும் இல்லை

### சுதந்திரக் கட்சி எம். பி. கவலை

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா இறந்த பின் அவரைப் பற்றிப் பேசுவதற்கே ஆளில்லாத நிலை உருவாகி வருகிறதென சுதந்திரக்கட்சி பிரதம கொறடாவான ரிச்சர்ட் பத்திரன கவலை தெரிவித்துள்ளார்.

பத்திரிகைத்தாள்இறக்குமதி தொடர்பாக அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி பதவியிலிருந்து ஜே ஆர். ஜெயவர்த்தன அகன்றபின் அவரைப் பற்றிப் பேச ஆளிருக்கவில்லை. எல்லோரும் அதி உத்தம ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா பற்றியே பேசினார்கள். ஜனாதிபதி பிரேமதாசா மறைந்த பின் இப்போது அவரைப் பற்றிப் பேசவும்ஆளில்லாத நிலை உருவாகி வருகின்றது.

ராஜாங்கஅமைச்சர் அஸ்வர் போன்றோரே பழைய நிலைப் பாட்டில் தொடருகின்றனர். பல பதவிகள் மாற்றப்பட்டு விட்டன சுச்சரித்தவுக்கும் யாரும்போவதில்லைசுச்சரித்த பாழடைந்து விட்டதாக ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கவே கூறியிருக்கிறார் என்றெல்லாம் ரிச்சர்ட் பத்திரன சுட்டிக்காட்டியபோது அரச தரப்பில் வழமைக்கு மாறான மௌனம் நிலவியது குறிப்பிடத்தக்கது.

## பாம்பு தீண்டியது

## டி.பி - காமினி சந்திப்புபற்றி பிரேமச்சந்திரா விளக்கம்

[கொழும்பு]

நாட்டின் தலைவர் என்ற முறையிலும் எமதுகட்சி உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து முறையிடவுமே எமது கட்சித் தலைவர் காமினி திசநாயக்கா ஜனாதிபதி டி பி. விஜயதுங்காவைச் சந்தித்தாரே தவிர ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது என்ற பேச்சுக்கே இடமில்லை என ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின கட்சியினர் மீது வீண்பழி சுமத்தப்படுகிறது. நாம் மீண்டும் ஐக்கியதேசியக்கட்சியுடன் இணையப் போகிறோம் என்ற பிரசாரத்தை அரசாங்கமே மேற்கொண்டு வருகிறது.

இம் முறைத் தேர்தலில் 20 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ள நாம் எதிர்வரும் தேர்தல்களிலும் போட்டியிட்டு வெற்றி பெறுவோம்.

ஐக்கிய தேசியக் கட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள பிளவு காரணமாக வெளியேறும் எவரையும் ஏற்றுக்கொள்ள ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சி

## நட்டஈடு வழங்குதலிலும் கட்சிப் பாகுபாடு

### நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

இலங்கையில் காணாமல் போன அல்லது கொலை செய்யப்பட்ட அனைவருக்கும் கட்சி வேறுபாடுகள் இல்லாமல் நட்டஈடு வழங்கப்பட வேண்டும். தற்போது இவ்வாறு காணாமல் போன அல்லது கொலை செய்யப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படுவதிலும் கட்சிப் பாகுபாடு காட்டப்படுவதாகச் சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பழைய ஜனாதிபதியின் பல சமூக மோசடிகளைப் புதிய ஜனாதிபதி நிறுத்தியுள்ளார். எங்கு மோசடி நடைபெற்றாலும் அதற்கு அந்த அமைச்சர்களே பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை பிரேமதாசா ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற பல கொலைகளுக்கும் சுதந்திரமான விசாரணை நடத்த ஆவன செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## உணவுமுத்திரை பொருள்கள் விநியோகிப்பதில் தடங்கல்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைமாணவர்உணவு முத்திரை விநியோகத் தொகுப்பு பாடசாலை அதிபர்களிடமிருந்து உரிய காலத்தில் கிடைக்கப்பெறாததால் மாணவர் உணவு முத்திரைக்கான உணவு விநியோகத்தைத் தமது கிளைச் சங்கங்கள் மூலம் சீராகச் செய்ய முடியவில்லை என்று யாழ்.ப. நோ. கூ.சங்க நிர்வாகம் கவலை தெரிவிக்கிறது.

யாழ். ப.நோ.கூ. சங்கத்தில் பதியப்பட்டுள்ள 45 பள்ளிக் கூடங்களில் பத்துப் பாடசாலைகள் தவிரஏனைய 35பாடசாலைகளும் இதுவரை உணவு முத்திரை விநியோகத் தொகுப்பை அனுப்பிவைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை சங்கக் கிளைகள் மாணவர் உணவு முத்திரைக்கான பொருள்கள் விநியோகத்தை ஆரம்பித்துள்ளன.

மொத்தம் 30,822 மாணவர்கள் யாழ். ப.நோ.கூ. சங்க கிளைகளில் உணவு முத்திரை மூலம் உணவுப்பொருள்கள் பெறப் பதியப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கட்டுநிதி

யாழ். கல்வித் திணைக்களத்திற்கான யூன் மாதத்திற்குரிய கட்டுநிதி யாழ். கல்வித் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

## புலிகளுடன்

ஏற்கமுடியும் தம்மை விடுவிக்க ஏழுநாள் அவகாசம் கொடுத்துள்ளதாகவும் அதற்குள் தம்மை விடுவிக்க கால அவகாசம் இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்குள் அரசு புலிகளுடன் பேசி சாதகமான முடிவை எடுக்க முடியும் என்றும் போர் கைதிகள் மேலும் தெரிவித்தனர். எமது உண்ணாவிரதத்தை கைவிடுமாறும் தாம் விடுதலைக்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கூறியதாக பத்திரிகை செய்திகள் வெளியாகியுள்ளன. இதை நம்பமுடியாது.

## நூல் வெளியீடு

புலவர் நா. சிவபாதசுந்தரனார் எழுதிய ‘புறப்பொருள் வெண்பா மாலை’ ஆராய்ச்சி நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் புதன்கிழமை மாலை மூன்று மணியளவில் யாழ். பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் சிரேஷ்ட விரிவுரையாளர் சிவலிங்கராசா, திருமதி மனோன்மணி, சண்முகதாஸ், க. நாகேஸ்வரன், கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தவுள்ளனர்.

## மருந்தாளர்

இல்லாமல் வைத்தியர் எழுதித் தரும் சிட்டையில் குறிப்பிட்ட மருந்துக்கு பதிலாக வேறு மருந்துகளைக் கொடுக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது

யாழ் குடாநாட்டில் மொத்தம் 52 ஆங்கில மருந்தகங்கள் இருக்கின்றன. ஆனால் இதில் பதிவு செய்யப்பட்ட மருந்தகங்கள் ஆறுதான்எனக் குறிப்பிட்ட அவர் ஆங்கில மருந்தகங்கள் எல்லாம் பயிற்றப்பட்ட மருந்தாளர் அல்லது ஆர். எம்.பி. ஒருவரை சேவையில் அமர்த்தவேண்டுமென்றும் எல்லா மருந்தகங்களும் பதிவு செய்யப்படவேண்டு மென்றும் தடைசெய்யப்பட்ட மருந்துகள், காலாவதியான மருந்துகள், மருந்துக் கம்பனியால் பொதிசெய்யப்படாது இங்கு பொலித்தின் பக்கற்றுக்களில்

வருகின்றது. தமது பெற்றோர் யாழ்ப்பாணம் வந்து தம்மைப் பார்வையிடும் வரையில் தாம் உயிருடன் இருப்போமா என்று அவர்கள் அச்சப்படத் தொடங்கியுள்ளனர்.

இவ் உண்ணாவிரதம் பற்றிய அறிவிப்பானது, உண்ணாவிரதம் ஆரம்பிப்பதற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்னரே அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. அரசாங்கம் அது குறித்து அலட்டிக் கொண்டதாக இல்லை. அவர்களை விடுவிப்பதற்கு முன்னேற்றகரமான நடவடிக்கை எதையும் எடுக்கவுமில்லை. தற்பொழுது உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கூட பொலிஸாரின் நிலை குறித்து கவலைப்படுவதாக இல்லை.

அத்தோடு இவ்விடயத்தில் அரசாங்கம் குதர்க்கம் பண்ணுவதிலும், பிரச்சினையை மேலும் மேலும் சிக்கலாக்கும் விதத்திலேயே நடந்து கொள்கின்றது. சிங்களப் பொலிஸார் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பிக்கும் முன்னரே, இப்போராட்டம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிரானது என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தனர். தம்மை விடுதலை செய்வதற்கு உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே அவர்களது கோரிக்கை ஆகும்.

இதேவேளை, உண்ணாவிரதம் இருப்பவர்கள் போர்க் கைதிகளாக புலிகளின் பாதுகாப்பில் இருப்பதினால் உண்ணாவிரதத்திற்குரிய ஒழுங்குநடவடிக்கைகளை புலிகள் மேற்கொள்ளவேண்டியுள்ளது. நிலைமை இவ்வாறிருக்க சிறிலங்கா அரசாங்கமோ உண்ணாவிரதம் விடுதலைப் புலிகளுக்கு எதிரானது என உண்மையைத் திரிபுபடுத்தி அரசியல் லாபம் தேட முற்படுவதோடு, இனக் குரோதத்தையும் வளர்க்க முற்படுகின்றது.

இதன் அடிப்படையில் உண்ணாவிரதம் புலிகளின் கட்டாயத்தின் பேரில் மேற்கொள்ளப்படுவதாகப் பிரசாரம் செய்வதிலும், அதற்கு வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனங்கள் மூலம் முக்கியத்துவம் தேடவும் முற்பட்டுள்ளது. இதற்கு ஈ.பி.டி.பி. போன்ற துரோகக் குழுக்களையும் பயன்படுத்த முற்பட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாகவே ஈ.பி.டி.பி. குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா புலிகளின் கட்டாயத்தின்பேரில் மேற்கொள்ளப்படும் உண்ணாவிரதம் என்ற அறிவிப்பாகும்.

ஆனால், அரசாங்கத்தினதும், அவர்களின் அடிவருடிகளான டக்ளஸ்தேவானந்தா போன்றோரின் இத்திரிபு படுத்தப்பட்ட பிரசாரத்தை யாராவது கருத்திற் கொள்வார்களேயானால், அவர்களுக்கு எதையும் பகுத்தறியும் ஆற்றல் அற்றவர்கள்என்றே கூறவேண்டும்.

ஏனெனில், கைதிகளின் உண்ணாவிரதம் பற்றி ஏற்கனவே எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதோடு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி உண்ணாவிரதிகளை தினசரி நேரடியாகப் பார்வையிட்டும் வருகின்றார். கட்டாயத்தின் பேரில் அவர்கள் உண்ணாவிரதம் இருப்பின் இது வரையில் அது இவர்களால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும்.

இந்நிலையில், சிறிலங்கா அரசாங்கம் உண்ணாவிரதப் போராட்டம் விடுதலைப் புலிகளுக்கு எதிரானது, புலிகள் கட்டாயத்தின் பேரிலேயே நடைபெறுகின்றது என்று உலகத்தையும் சிங்கள வரையும் ஏமாற்ற முற்படுமானால் அது பயனளிக்கப் போவதில்லை. அதனால் நன்மையும் கிட்டப் போவதில்லை. மாறாக தீமையே விளையும்.

---

ஆளில்லாத நிலை உருவாகி வருகிறதென சுதந்திரக்கட்சி பிரதம கொறடாவான ரிச்சர்ட் பத்திரன கவலை தெரிவித்துள்ளார்.

பத்திரிகைத்தாள்இறக்குமதி தொடர்பாக அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி பதவியிலிருந்து ஜே ஆர். ஜெயவர்த்தன அகன்றபின் அவரைப் பற்றிப் பேச ஆளிருக்கவில்லை. எல்லோரும் அதி உத்தம ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா பற்றியே பேசினார்கள். ஜனாதிபதி பிரேமதாசா மறைந்த பின் இப்போது அவரைப் பற்றிப் பேசவும்ஆளில்லாத நிலை உருவாகி வருகின்றது.

## பாம்பு தீண்டியது

பாம்பு தீண்டிய ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ். மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

கொடிகாமம் மந்துவிலைச் சேர்ந்த மு. சின்னத்தம்பி (55வயது) என்பவர் நேற்று முன் தினம் தனது வீட்டில் குப்பையை அள்ளி துப்புரவுசெய்யும்போது காலில் பாம்பு தீண்டியதாகவும், அவர்சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு பின்பு அங்கிருந்து அம்புலன்சில் யாழ். மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

---

விட்டன சுச்சரித்த துவுக்கும் யாரும்போவதில்லைசுச்சரித்த பாழடைந்து விட்டதாக

அரச தரப்பில் ... மாறான மௌனம் நிலவியது குறிப்பிடத்தக்கது.

## டி.பி - காமினி சந்திப்புபற்றி பிரேமச்சந்திரா விளக்கம்

[கொழும்பு]

நாட்டின் தலைவர் என்ற முறையிலும் எமதுகட்சி உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து முறையிடவுமே எமது கட்சித் தலைவர் காமினி திசநாயக்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவைச் சந்தித்தாரே தவிர ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது என்ற பேச்சுக்கே இடமில்லை என ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியினரால் எமக்கு பல நெருக்குதல்கள் உருவாகியுள்ளன. எமது கட்சியினர் மீது வீண்பழி சுமத்தப்படுகிறது. நாம் மீண்டும் ஐக்கியதேசியக்கட்சியுடன் இணையப் போகிறோம் என்ற பிரசாரத்தை அரசாங்கமே மேற்கொண்டு வருகிறது.

இம் முறைத் தேர்தலில் 20 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ள நாம் எதிர்வரும் தேர்தல்களிலும் போட்டியிட்டு வெற்றி பெறுவோம்.

ஐக்கிய தேசியக் கட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள பிளவு காரணமாக வெளியேறும் எவரையும் ஏற்றுக்கொள்ள ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவுள்ளது என மேலும் அவர் தெரிவித்தார்.

## கூட்டுறவு தினம் போட்டிகளுக்கு ஏற்பாடு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சர்வதேச கூட்டுறவு தின விழாவையொட்டி யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை அதன் அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்கள், பணியாளர்களிடையே பேச்சு, கட்டுரை, வினாடிவினா, குழுப்பாடல், கிராமிய நடனம், நாடகம் ஆகியவற்றில் போட்டிகளை நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் யாவும் ஒவ்வொருகோட்ட மட்டத்திலும் இம்மாதம் 19ஆம், 20ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளில் இடம்பெறும் எனக் கூட்டுறவுச் சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (24) (22)

## ஆண்டு 1க்கு புதிய பாடத்திட்டம் கருத்தரங்கு நடத்த நிதி ஒதுக்கீடு

ஆண்டு 1 புதிய பாடத்திட்டம் பற்றிய கருத்தரங்குகளை கோட்ட மட்டத்தில் மூன்று நாட்களுக்கு நடாத்துமாறும் இக் கருத்தரங்குகளை நடாத்த பங்குபற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூபா 90-ம் பங்குபற்றும் மற்றைய ஆசிரியர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூபா 40-ம்வழங்கப்பட வேண்டும் என வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளது.

சாவகச்சேரி கல்விக் கோட்டத்துக்கு ரூபா 15,078 உம் யாழ். கல்விக் கோட்டத்துக்கு ரூபா 24,935 உம் மருதனார்மடம் கல்விக் கோட்டத்துக்கு ரூபா 27, 853. உம் பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்துக்கு ரூபா 20, 857உம் வடமராட்சி கல்விக் கோட்டத்துக்கு ரூபா20,075. உம் வேலணைக் கல்விக் கோட்டத்துக்கு ரூபா 4910 உம் ஒதுக்கப்பட்டுள்ளதாக இதில்குறிப்பிடப்பட்டுள்ளது. (17)

யுத்த

78உறவினர்களும் ஒரு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதியும் 2 சர்வதேச சங்க கொழும்பு கிளையின் தமிழ்-சிங்கள மொழிபெயர்ப்பாளர்களும் இந்த விஜயத்தில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேச

டம் ஒப்படைத்துவிட்டு அதற்குப் பிரதியுபகாரமாக லொறி உரிமையாளர்களிடம் பணம் வாங்கியுள்ளார். அத்துடன் தனது தேவைகளிற்காக இராணுவ உளவாளிகடளிம் சிறு தொகைப் பணமும் பெற்று வந்துள்ளார்.

இலங்கை அகதிகள் விவகாரம்

## டென்மார்க் நீதிமந்திரி குற்றவாளி எனத் தீர்ப்பு

(கொபன்ஹேகன்)

இலங்கைத் தமிழ் அகதிகளை பராமரிக்கும் விடயத்தில் இடம்பெற்ற ஊழல் தொடர்பாக டென்மார்க் முன்னாள் நீதியமைச்சர் எரிக் நின்ஹான்செனுக்கு எதிராக அந்நாட்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட அரசியல் குற்றச்சாட்டு பிரேரணை நிறைவேறிவிட்டது.

டென்மார்க்கின் அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்றத்தில் அரசியல் குற்றச்சாட்டு பிரேரணை நிறைவேறிய பின் அதை பல நீதிபதிகள் கொண்ட குழுவே விசாரணை செய்யும். இந்த விசாரணை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

70 வயதான இந்த அமைச்சர் அபராதத் தண்டனையை அல்லது இருவருட சிறைத் தண்டனையை எதிர்நோக்கியிருப்பதாக டெனிஷ் பாராளுமன்ற சட்டவியல் திணைக்கள பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

யாழ். கல்வித் திணைக்களத்திற்கான யூன் மாதத்திற்குரிய கட்டுநிதி யாழ். கல்வித் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

புலிகளுடன்

ஏற்கமுடியும் தம்மை விடுவிக்க ஏழுநாள் அவகாசம் கொடுத்துள்ளதாகவும் அதற்குள் தம்மை விடுவிக்க கால அவகாசம் இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்குள் அரசு புலிகளுடன் பேசி சாதகமான முடிவை எடுக்க முடியும் என்றும் போர் கைதிகள் மேலும் தெரிவித்தனர். எமது உண்ணாவிரதத்தை கைவிடுமாறும் தாம் விடுதலைக்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கூறியதாக பத்திரிகை செய்திகள் வெளியாகியுள்ளன. இதை நம்பமுடியாது. ஏனெனில் முன்பு எம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன. இருந்தும் இதுவரை எந்த விடுதலையும் கிட்டவில்லை. எனவே எம்மால் பத்திரிகைகளில் வருவது குறித்து நம்பமுடியாது என்றும் போர்க் கைதிகள் அப்பேட்டியில் தெரிவித்தனர்.

எம்மை விடுவிப்பது தொடர்பாக அரசு புலிகளுடன் பேசி அவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு கூறி செஞ்சிலுவைச் சங்கம் எமக்கு அது குறித்து கூறவேண்டும் அல்லது எம்மை விடுதலை செய்யும் திகதியை நிரந்தரமான முறையில் செஞ்சிலுவைச் சங்கத்திடம் வழங்கினால் அல்லாது நாம் இந்த உண்ணாவிரதத்தை நிறுத்த மாட்டோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

வவுனியா

மாக காவல்பணிமனை திறந்து வைக்கப்பட்டது. காவல் பணிமனை திறப்புவிழா நிகழ்ச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும், ஏராளமான பொது மக்களும் கலந்துகொண்டனர். இதனைத் தொடர்ந்து தமிழீழ காவல் துறையினரின் ''பாண்ட்'' வாத்தியத்துடன் இந்நிகழ்ச்சிஇனிது முடிவடைந்தது.

பணிமனை திறந்துவைக்கப்பட்டதைத்தொடர்ந்து ஏராளமான பொது மக்கள் தமது முறைப்பாடுகளை பதிவுசெய்தனர். இப்பிரதேச மக்களின் நீண்டநாள் அபிலாசைகளாவன, தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர் ளினால் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். இப்பணிமனை பொது மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு 24மணி நேரமும் செயற்படும் என தமிழீழகாவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

---

மருந்தாளர்

இல்லாமல் வைத்தியர் எழுதித் தரும் சிட்டையில் குறிப்பிட்ட மருந்துக்கு பதிலாக வேறு மருந்துகளைக் கொடுக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது

யாழ் குடாநாட்டில் மொத்தம் 52 ஆங்கில மருந்தகங்கள் இருக்கின்றன. ஆனால் இதில் பதிவு செய்யப்பட்ட மருந்தகங்கள் ஆறுதான்எனக் குறிப்பிட்ட அவர் ஆங்கில மருந்தகங்கள் எல்லாம் பயிற்றப்பட்ட மருந்தாளர் அல்லது ஆர். எம்.பி. ஒருவரை சேவையில் அமர்த்தவேண்டுமென்றும் எல்லா மருந்தகங்களும் பதிவு செய்யப்படவேண்டு மென்றும் தடைசெய்யப்பட்ட மருந்துகள், காலாவதியான மருந்துகள், மருந்துக் கம்பனியால் பொதிசெய்யப்படாது இங்கு பொலித்தின் பக்கற்றுக்களில் அடைக்கப்படும் மருந்துகள், சரியானமுறையில் குளிரூட்டிப் பெட்டிகளில் பாதுகாக்கப்பட வேண்டி மருந்துகள் அப்படி பாதுகாக்கப்படாது விற்பனை செய்தல் போன்றன உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் ஆங்கில வைத்தியர், பல்வைத்தியர், மிருக வைத்தியர் போன்றோரது சிட்டைகளுக்கே மருந்துகள் விற்கப்படவேண்டும். சிட்டையில்லாது எந்த மருந்துகளும் விற்பனை செய்யக்கூடாதுபோன்ற விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டே ஆங்கில மருந்தகங்கள் செயற்படவேண்டுமென தெரிவித்தார்.

புலிகளை

ணுவம்இரண்டுதசாப்தங்களில் 35 பட்டாலியன் காலாட்படைகளையும், அதற்கான தொண்டர் படைகள் மற்றும் நடவடிக்கை மையங்கள், பயிற்சி, இதரவசதிகள், மருத்துவம், புலனாய்வு போன்ற துறைகளில் விரிவுபடுத்தப்பட்டும் இருக்கின்றது. விசேட நடவடிக்கை பிரிவு சக்திவாய்ந்த கனரக ஆயுதப் பிரிவு என்பனவும் இப்போது இருக்கின்றது. எல்லாமாக 90,000 பேருக்கு மேல் கொண்ட இராணுவமாக சிறிலங்கா இராணுவம் இப்போது விளங்குகின்றது.

சடந்த ஆண்டில் இராணுவ தரப்பில் அதிகாரிகள் உட்பட 1050 பேருக்கு இழப்பு நேரிட்டது. இப்போது பயிற்சி முறைகளில் மிக முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதுடன், புதிய ஆட சேர்ப்புகளும் நடத்தப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இராணுவத்தினுள் ஊழல், வீண்விரயம், மோசடிகள் என்பவற்றில் விரும்பத்தகாத சில சக்திகள் மேற்கொண்டு வந்தன என்பதை ஒப்புக்கொண்ட அவர் தற்போது இராணுவத்தினுள் உட்பூசல் எதுவுமில்லை எனவும் தெரிவித்தார்.

ஈழநாதம்

500 மட்டு. குடும்பங்கள்

# கொழும்பு அகதிமுகாமில் உண்ணாவிரதம்

[கொழும்பு]

கொழும்பில் அகதிமுகாமில் உள்ள சுமார் 500 குடும்பங்கள் நேற்று முன் தினம் தொடக்கம் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

தம்மை அரசாங்கம் கட்டாயப்படுத்தி மட்டக்களப்பு பகுதியில் குடியமர்த்த முயற்சிப்பதாகவும் அங்கு இன்னும் சாதாரணவாழ்க்கை நடத்தக் கூடியதாக இல்லையென்றும், தொடர்ந்து இராணுவ சுற்றிவளைப்புக்களும் நடைபெற்றுக் கொண்டு இருப்பதாகவும் இதனால் தாம் மட்டக்களப்பு பகுதிக்கு செல்ல விரும்பவில்லை எனவும் தெரிவித்தே மேற்படி அகதிகள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

இராணுவ சுற்றிவளைப்பினால் மட்டக்களப்பு பகுதியில் தொடர்ந்து பலர் சுட்டுக் கொல்லப்பட்டும், காணாமல் போயும் உள்ளனர்என இவ் அகதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு

## இலவச பாடப்புத்தகங்கள் விநியோகம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இரண்டாம் தொகுதி (சுமார் மூன்று லட்சம்) இலவசப் பாடப்புத்தகங்கள் குமாரி கப்பல் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டு யாழ். கல்வித்திணைக்களம் கொண்டுவரப்பட்டுள்ளன.

இப்பாடப்புத்தகங்கள் யாழ். கல்வித்திணைக்களத்தினால் சகல கோட்டக்கல்வி அலுவலகங்களின் ஊடாக யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடப் புத்தங்களின் ஒரு தொகுதிஏற்கனவே கொழும்பில் இருந்து இங்கு எடுத்துவரப்பட்டு விநியோகிக்கப்பட்டன. மிகுதி பாடப்புத்தகங்கள் அச்சுப்பதித்தலில் ஏற்பட்ட தாமத்தினால் இங்கு எடுத்துவரப்படவில்லை. இதனைத் தொடர்ந்து பாடப்புத்தக விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தற்போது மீண்டும் மிகுதி பாடப்புத்தகம் வந்தமையைத் தொடர்ந்து இலவசப்பாடப் புத்தக விநியோகம் ஆரம்பிக்கப்பட இருப்பதாக யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

## 1750 பீப்பா மண்ணெய் நாளை கப்பலில் வரும்

[கொழும்பு]

யாழ் குடாநாட்டுக்கு மண்ணெண்ணெய்ப் பீப்பாக்களை ஏற்றிவரும் நில்கிரி கப்பல் தனது மேற்படி சேவையை நிறுத்தியுள்ளது.

இக் கப்பலுக்குப் பதிலாக ''மத்ரண'' என்ற கப்பல் குடாநாட்டுக்கான மண்ணெண்ணெய்ப் பீப்பாக்களை ஏற்றி வரும் சேவையைத் தொடர உள்ளது.

இக் கப்பல் சுமார் 1750 பீப்பா மண்ணெண்ணெயுடன் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து நேற்றுக்காலை புறப்பட்டுள்ளது. இக்கப்பல்நாளை பருத்தித்துறைதுறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக் கப்பவில் 60பீப்பாடீசலும் எடுத்து வரப்படுகிறது.

## உணவுப் பொருள்களுடன் குமண புறப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டிற்கு தேவையான அத்தியாவசிய பொருள்களின் ஒரு தொகுதியை ஏற்றிக் கொண்டு குமண கப்பல் நேற்று அதிகாலை 4-00 மணிக்கு கொழும்பு துறைமுகத்திலிருந்து புறப்பட்டுள்ளது.

இக்கப்பலில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குத் தேவையான 2000 மெற்றிக் தொன் பொருள்களும், அரசாங்க நிறுவனத்திற்கு தேவையான 1200 மெற்றிக் தொன் பொருள்களும், 300 தபால் பொதிகளும் ஏற்றப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

### கலந்துரையாடல்

பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு மணிக்கூட்டு வீதியில்உள்ள யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபையின் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும். (22)

## இடமாற்றம்

இதுவரை காலமும் யாழ். ஸ்ரான்லிவீதியில் இயங்கிவந்த மக்கள் வங்கியின் யாழ் பிரதான வீதிக்கிளை எதிர்வரும் திங்கள் முதல் யாழ். பிரதான வீதியிலுள்ள சொந்தக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு. அலுவல்களை மேற்கொள்ளும்என உதவி பிரதேசமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

## பரீட்சைக்கு தோற்ற முடியா நிலை

யாழ். மாவட்டத்தில் தட்டெழுத்தாளர்களாக கடமையாற்றுபவர்கள் தமது பதவி உயர்வுப் பரீட்சையை எடுக்கமுடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதாக அறியப்படுகிறது.

இவர்களுக்கான பரீட்சை இம்மாதம் 19ஆம் திகதி கொழும்பில் நடாத்தப்பட உள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் செல்வதற்காக இவர்களுக்கு கப்பல் அனுமதி பெற யாழ். அரச அதிபர் முயற்சித்த போதிலும் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் இவர்களுக்கு

## அலங்கார உற்சவம்

ஆனைக்கோட்டை புற்கை தின்னிப் பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகி பதினொரு தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

அபிஷேகம். பூசை, ஆராதனைகளைத் தொடர்ந்து விநாயகர் வீதிஉலா வருவார். உற்சவ காலங்களில் சிவஞான துரந்தரர் திரு எம்.எஸ். ஸ்ரீ தயாளன் (தமிழ்மொழி

### செல்வி யூசி விடைபெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ். சர்வதேச செஞ்சிலுவை சங்க பதில் வதிவிட பிரதிநிதியாகவும், கப்பல் பிரதிநிதியாகவும் கடமையாற்றிய செல்வி யூசி ஜெனீவா பயணமாகின்றார்.

சுமார் ஒரு வருட காலம் இங்கு கடமையாற்றிய இவர் ஜூலை மாதம் ஜெனீவா செல்வார் என தெரியவருகிறது.

## வீரவணக்க கூட்டம்

(அரியாலை)

6-ஆம் ாதங்களில் (ஜூன் மாதம்) வீரச்சாவடைந்த தென்மராட்சிக் கோட்டத்தின் சாவகச்சேரி வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீர

### சமூக விஞ்ஞான மன்ற ஆதரவில் கருத்தரங்கு

யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இன்று பி. ப 3 மணியளவில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. சமூக விஞ்ஞான மன்றத்தின் ஆதரவில் நடைபெறும் இக் கருத்தரங்கில் ''சுற்றுச் சூழலும், நிலைத்து நிற்கும் அபிவிருத்தியும்'' என்னும் விடயத்தின் கீழ் கலாநிதி தேவநேசன் நேசையா (செயலாளர், சுற்றுச்சூழல், பாராளுமன்ற அலுவலல்கள் அமைச்சு) கருத்துரை வழங்குவார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 16-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9882

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-0767, 24-5396, 26-1724, 24-5029, 28-0429,
24-9825, 26-6264, 27-3946, 24-4560, 27-9327,
26-4691, 28-9633, 28-8484, 27 2107, 26 3654,
42-1325, 24-5912, 28-0882, 26-7546, 26-2502,
22-9127, 24-4390, 26-3177, 28-9927, 27-9162,
27 5633, 26-7399, 27-6259, 27 7756.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28 2511, 26-9703, 26-2414, 27 1375, 27-5807,
22-4473, 42-3815, 24-1685, 24-1205, 26-8674,
28-8229, 22-5812, 42-1178, 22-7271, 27 5863,
24-4457, 24-6348, 24-6944.


## தேவை

### களஞ்சியப் பொறுப்பாளர்

யாழ். நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் வர்த்தக நிறுவன மொன்றிற்கு தகுதிவாய்ந்த களஞ்சியப் பொறுப்பாளர் தேவை. வயதெல்லை 40 முதல் 50 வரை. தகுந்த அனுபவ ஆவணங்களுடன் 23-06-93 ற்கு முன் விண்ணப்பிக்கவும். நேரிலும் விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

முகவரி:-

விளம்பர இலக்கம் 190,
மே / பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(5161)

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர்

### சங்கங்களின் சமாசம்

K. K. S. வீதி, 1083, நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்:

1ஆவது பரிசு இலக்கம்: 24743
2ஆவது பரிசு இலக்கம்: 14244
3ஆவது பரிசு இலக்கம்: 17200

10 ஆறுதல் பரிசுகள்:

(1) 5335 [2] 8271 [3] 12334 [4] 7548
[5] 6086 [6] 15777 [7] 21764 [8] 7135
[9] 15050 [10] 22904

குறிப்பு:- நாளை 18-6-93 வெள்ளிக்கிழமை காலை 8 மணியில் இருந்து 5 மணிவரை பரிசுக்குரிய இலக்கமுடையோர் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும். புதன் கிழமைகளிலும் தொடர்பு கொள்ளலாம்.

★ அனைத்து சிகை அலங்கரிப்பு நிலையங்

## யாழ். நயன்மார்கட்டு

சனசமூக நிலையத்தின்

## 18 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகள்

19-6-93 சனிக்கிழமை காலை 6 மணி

பெண்களுக்கான 10 மைல் தூர சைக்கிள் ஓட்டப் போட்டி

நியூ சிந்தியா ஜுவலர்ஸ் ஆதரவில் இடம்பெறும்

யாழ். மாவட்ட ரீதியாக நடைபெறும் இப் போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் 18-6-93 அன்று நிலைய செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

இரவு:

### கானல் நீர், காகித ஓடம், என்னுயிர் கண்ணம்மா

எனும் 3 நாடகங்கள்

### அருணா இசைக்குழுவினரின்

இசை நிகழ்ச்சிகள் இடம்பெறும்

(சி/6854) -நிலைய செயலாளர்


## 31-ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 6-1-1906

இறப்பு: 18-5-1993

மக்கள் வங்கியின் யாழ். பிர
தான வீதிக்கிளை எதிர்வரும்
திங்கள் முதல் யாழ். பிரதான
வீதியிலுள்ள சொந்தக் கட்ட
டத்திற்கு மாற்றப்பட்டு. அலு
வல்களை மேற்கொள்ளும்என
உதவி பிரதேசமுகாமையாளர்
அறிவித்துள்ளார்.

## அலங்கார உற்சவம்

ஆனைக்கோட்டை புற்கை
தின்னிப் பிள்ளையார் ஆலய
அலங்கார உற்சவம் நாளை
வெள்ளிக்கிழமை மாலை
ஆரம்பமாகி பதினொரு தினங்
கள் தொடர்ந்து நடைபெறும்.

அபிஷேகம். பூசை, ஆரா
தனைகளைத் தொடர்ந்து
விநாயகர் வீதிஉலா வருவார்.
உற்சவ காலங்களில் சிவ
ஞானதுரந்தரர் திரு எம்.எஸ்.
ஸ்ரீ தயாளன் (தமிழ்மொழி
அபிவிருத்திச்சங்க ஆலோசகர்)
'விநாயகர் மகிமை' பற்றி
தொடர் சொற்பொழிவினை
நிகழ்த்துவார்.

...தில் சபையின் தலைவர் திரு.
வை. செந்திநாதன் தலைமை
யில் நடைபெறும். (22)

## பரீட்சைக்கு தோற்ற முடியா நிலை

யாழ். மாவட்டத்தில்
தட்டெழுத்தாளர்களாக
கடமையாற்றுபவர்கள்
தமது பதவி உயர்வுப் பரீட்
சையை எடுக்கமுடியாத சூழ்
நிலை உருவாகியுள்ளதாக
அறியப்படுகிறது.

இவர்களுக்கான பரீட்சை
இம்மாதம் 19ஆம் திகதி
கொழும்பில் நடாத்தப்பட
உள்ளது. யாழ்ப்பாணத்தில்
இருந்து கொழும்புக்குச் செல்
வதற்காக இவர்களுக்கு கப்பல்
அனுமதி பெற யாழ். அரச
அதிபர் முயற்சித்த போதிலும்
கூட்டுப்படைத் தலைமை
அலுவலகம் இவர்களுக்கு
இடம் ஒதுக்கீடு செய்யாத
காரணத்தால் இவர்கள்
கொழும்பு செல்லவில்லை
எனவும் அறியப்படுகிறது. (17

விடைபெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ். சர்வதேச செஞ்சி
லுவை சங்க பதில் வதிவிட
பிரதிநிதியாகவும், கப்பல்
பிரதிநிதியாகவும் கடமையாற்
றிய செல்வி யூசி ஜெனீவா
பயணமாகின்றார்.

சுமார் ஒருவருட காலம்
இங்கு கடமையாற்றிய இவர்
ஜூலை மாதம் ஜெனீவா
செல்வார் என தெரியவருகி
றது.

## வீரவணக்க கூட்டம்

(அரியாலை)

6-ஆம் ஈதங்களில் (ஜூன்
மாதம்) வீரச்சாவடைந்த
தென்மராட்சிக் கோட்டத்தின்
சாவகச்சேரி வட்டத்திற்குட்
பட்ட மாவீரர்களுக்கான வீர
வணக்கக்கூட்டம் இன்று இரவு
8 00 மணிக்கு மட்டுவில் சிவன்
கோவில் முன்றலில் நடை
பெறும். (90)


வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர்

## சங்கங்களின் சமாசம்

K. K. S. வீதி, 1083, நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்:

1ஆவது பரிசு இலக்கம்: 24743
2ஆவது பரிசு இலக்கம்: 14244
3ஆவது பரிசு இலக்கம்: 17200

10 ஆறுதல் பரிசுகள்:

(1) 5335 [2] 8271 [3] 12334 [4] 7548
[5] 6086 [6] 15777 [7] 21764 [8] 7135
[9] 15050 [10] 22904

குறிப்பு:- நாளை 18-6-93 வெள்ளிக்கிழமை காலை 8 மணியில் இருந்து 5 மணிவரை பரிசுக்குரிய இலக்கமுடையோர் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும். புதன் கிழமைகளிலும் தொடர்பு கொள்ளலாம்.

★ அனைத்து சிகை அலங்கரிப்பு நிலையங்களிலும் பரிசுக்குரிய இலக்கங்களைப் பார்வையிடலாம்.


சூசைஎட்வேட் — தலைவர்
ச. அன்ரன் இராசநாயகம் — செயலாளர்
(சி/6853)

## வடபிராந்திய சுருட்டுத்தொழிலாளர் சங்க

## அறிவித்தல்

சகல சுருட்டுத் தொழிலாளர்கட்கும் எதிர்வரும் 01-07-93க்கு முன்னர் அங்கத்தவ உறுப்புரிமையினை உறுதி செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தினை அலுவலகத்தில் பெற்றுப் பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ் உறுப்புரிமையை உறுதி செய்தவருக்கே சங்கச் செயற்பாடுகள் அனைத்தும் செயற்படுத்தப்படும் என்பதை சகல சுருட்டுத் தொழிலாளர்கட்கும் அறியத்தருகின்றேன்.

(சி/6851) — தலைவர்




# UNIKCO
## COMPUTER CENTRE

★ BASIC ★ PASCAL ★ d BASE III PLUS
★ LOTUS 1-2-3 ★ WORD PROCESSING
(Word Star Rel 5-5)

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

19-6-93 (சனி, ஞாயிறு) 18-6-93 (திங்கள், புதன், வெள்ளி)

மேலதிக விபரங்கட்கு:

37, CLOCK TOWER ROAD, JAFFNA

(வெலிங்டன் சந்திக்கு அருகாமை) (சி-6852)

## என்னுயிர் கண்ணம்மா

எனும் 3 நாடகங்கள்

## அருணா இசைக்குழுவினரின்

இசை நிகழ்ச்சிகள் இடம்பெறும்

(சி/6854) -நிலைய செயலாளர்


## 31-ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 6-1-1906
இறப்பு: 18-5-1993

திருமதி

## அனாராசம் தேவராசா

காலஞ்சென்ற தேவராசாவின் அன்பு மனைவி திருமதி அனாராசம் தேவராசா 18-5-93 அன்று கொழும்பில் காலமாகி, இறுதிக்கிரியைகள் 22-5-93 கொழும்பில் நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத்தந்து. அன்னாருக்கு எமது இதய அஞ்சலியை இந் நாளில் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிள்ளைகள்: பூலோகசுந்தரம் (அமெரிக்கா)
பூலோகஇந்திரன் (பிரான்ஸ்)
மருமக்கள்; லோஜி, நீற்ரா
பேரப்பிள்ளைகள்: மோகன், றோய், றொஜி, ரஜீவ்.

திரு திருமதி பிறைசூடி (சம்பந்தி) 'சறோஜினி பவன்'
கூழாவடி, ஆனைக்கோட்டை.
(5164)


ஜூன் 18, 19, 20 - 1993 ஆகிய தினங்களில்

இடம்: மன்றக்கலையரங்கம் யாழ். பிரதான வீதி

நேரம்: மாலை 5.30 - 9-45 ம.

## யாழ். திருமறைக் கலாமன்றம் வழங்கும்

# மாபெரும் இசை விழா

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

பிரவேசம்: இலவசம் - நிர்வாகத்தினர்

(சி6839)

முன்னணிக் கலைஞர்களின்

★ இசைக் கச்சேரி
★ வயலின் இசை
★ வீணை இசை
★ இசைச்சொற்பொழிவு
★ நாதஸ்வர இசை



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.